பக்கங்கள் 19

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 17 புதன்கிழமை 31.01.2024 அதிர்வு 184

## நீர்த்தேக்கத்திலிருந்து ஆணின் சடலம் மீட்பு!

(ராமு தனராஜா)

கிராதுருகொட்ட, உல்ஹிட்டிய நீர்த் தேக்கத்திலிருந்து ஆண் ஒருவரின் சடலம் இன்று மீட்கப்பட்டுள்ளது.

04

# தமிழரசுத் தேசிய மாநாட்டை வெகு விரைவில் நடத்துங்கள்!

## கட்சித் தலைவர் சிறிதரனுக்கு சுமந்திரன் கடிதம்

## தெரிவுகள் முடிவானவை என்பதும் சுட்டிக்காட்டு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜனவரி 31

"எமது வரலாற்றில் முதன்முறையாக வாக்கெடுப்பினாலே தெரிவுசெய்யப்பட்ட தலைவராகிய நீங்கள் அப்படியான அதற்குகந்த விமர்சையோடு வைபவ ரீதியாக பதிவியேற்பது முக்கியமான விடயமாகும்.

"எமது மக்கள் மத்தியில் எழுந்திருக்கும் பல்வேறு சந்தேகங்களுக்கும் விமர்சனங் களுக்கும் அது முற்றுப்பள்ளி வைக்கும். ஆகவே தயவு செய்து காலம் தாழ்த்தாது வெகு விரைவில் அந்தப் பகிரங்கப் பொது நிகழ்வை நடாத்துமாறும் அன்புரிமை யோடு நான் கேட்டுக்கொள்கின்றேன்."

- இவ்வாறு தமிழரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம் சிறிதரன் என்று குறிப்பிட்டு அவருக்குக் கடிதம் எழுதியிருக்கின்றார் கட்சியின் முன்னாள் பிரதிப் பொதுச் செயலாளர் ம. ஆ.சுமந்திரன்.

ஏற்கனவே நடந்த கட்சியின் நிர்வாகிகள் தெரிவு முடிந்த முடிவு என்பதையும் இக் கடிதத்தில் சுமந்திரன் பூடகமாகச் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

அந்தக் கடிதத்தின் முழுவிவரம் வருமாறு:-

04



# ராஜபக்ஷக்களின் அட்டூழியங்களை மன்னிக்க நாங்கள் தயார் இல்லை!

## பாவத்தில் எமக்குப் பங்கு வேண்டாம்; புதிய கூட்டணி குறித்து மனோ கருத்து

**"ராஜபக்ஷக்கள் அரங்கேற்றிய அட்டூழியங்களை மன்னிக்க நாம் தயார் இல்லை. ஆகவே, ஒரு கையால் ராஜபக்சஷக்களை கட்டி அணைத்தபடி மறுகையால் எம்மை சுட்டி அழைக்க வேண்டாம். நாம் இன்று இருக்கும் இடத்தில் சௌக்கியமாக இருக்கின்றோம். கோட்டாபய ராஜபக்ஷ போனாலும், அவரது பாவத்தின் நிழல் போகவில்லை. சட்டப்படி கோட்டாபய ராஜபக்ஷ 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி நடந்த ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற மக்கள் ஆணையுடன்தான் இந்த அரசு நடக்கின்றது. அந்தப் பாவத்தில் எமக்குப் பங்கு வேண்டாம்."**




**- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

நாட்டில் உருவாகி வரும் புதிய கூட்டணிகளிடமிருந்து தமது அணியை நோக்கி வரும் அழைப்புகள் பற்றி, தென்கொழும்பு கட்சி அலுவலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் மனோ எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது:-

"நேற்று முதல் நாள் அறிவிக்கப்பட்ட புதிய கூட்டணி நண்பர்கள் என்னுடன் பேசிய போது தெளிவாக ஒன்றைச் சொன்னேன். ஒரு கையால் ராஜபக்ஷக்களைக் கட்டி அணைத்தபடி மறுகையால் எம்மைச் சுட்டி அழைக்க வேண்டாம் என்று சொன்னேன். நாம் இன்று இருக்கும், ஐக்கிய மக்கள் கூட்டணி என்ற இடத்தில் நாம் சௌக்கியமாகவே இருக்கின்றோம் எனவும் சொன்னேன்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி நினைத்து இருந்தால், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி ஆகிய அடுத்த நாளே அமைச்சரவையில் இடம்பெற்றிருக்கலாம். ஆனால், அதை நாம் செய்யவில்லை. ஏனென்றால் பேரினவாதம், ஊழல் ஆகிய இரண்டு பேரழிவுகளுக்கும் ஏகபோக உரிமையாளர்களான ராஜபக்ஷக்களுடன் கலப்புக் கல்யாணம் செய்ய தமிழ் முற்போக்குக் கூட்டணி தயார் இல்லை. எங்கள் இந்த கொள்கை நிலைப்பாடு காரணமாகத்தான் நாம் இன்று ராஜபக்ஷ ஆதரவு ரணில் அரசில் இடம்பெறவில்லை.

இன்று இந்த ராஜபக்ஷ ஆதரவு ரணில் அரசில் அங்கம் வகிப்பவர்கள், தாம் ஏதோ வெட்டி முறித்து விட்டதாகத் தப்புக்கணக்குப் போட்டு விடக்கூடாது. நாம் அங்கே கொள்கை நிலைப்பாடு காரணமாக இல்லை. ஆகவேதான் நீங்கள் அங்கே இருக்கிறீர்கள். அதுதான் உண்மை. சட்டப்படி கோட்டாபய ராஜபக்ஷ 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி நடந்த ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற மக்கள் ஆணையுடன்தான் இன்றுவரை இந்த அரசு தொடர்கின்றது. அந்தப் பாவத்தின் நிழலில் அங்கமான உங்களுக்கு பாவத்தின் சம்பளம் அடுத்த தேர்தலில் கிடைக்கும்.

2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி முதல் இன்றுவரை, நான்கு வருடங்கள், இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. கடந்த நான்கு வருடங்களாக இந்த அரசின் பதவிகளில் இருக்கின்ற தமிழ் அரசியல்வாதிகளிடம், நீங்கள் இதுவரை வெட்டி முறித்த சாதனைகளை முடியுமானால் பட்டியல் இடுங்கள் எனப் பகிரங்க சவால் விடுகின்றேன். அபிவிருத்தி செய்ய நிதி இல்லை என்பீர்கள். சரி, அபிவிருத்தியை விடுங்கள். அரச நிர்வாக ரீதியாக தமிழ் மக்கள் தொடர்பில் நீங்கள் அமைச்சர்களாக, துணை அமைச்சர்களாக, அரச எம்.பிகளாக இதுவரை என்ன செய்து கிழித்துள்ளீர்கள் எனப் பகிரங்கமாகச் சொல்லுங்கள்? வேண்டுமானால், நாம் ஆட்சியில் இருந்த நான்கு ஆண்டுகளில் நாம் செய்த சாதனைகளையும், இன்று நீங்கள் இந்த நான்கு ஆண்டுகளில் செய்யத் தவறிய சீர்கேடுகளையும் நான் பகிரங்கமாகப் பட்டியல் இடுகின்றேன்.

எனவேதான், இந்தப் புதிய, பழைய பாவங்களின் கூட்டணியில் நாம் இல்லை. நாங்கள் சோரமும் போகவில்லை. பாவமும் செய்யவில்லை. ஆகவே, இந்தப் பாவத்தின் சம்பளம் எமக்கு கிடையாது. எனவே, தமிழ் முற்போக்குக் கூட்டணி என்ற முற்போக்கு அரசியல் இயக்கம், அடுத்து வரும் புதிய அரசில், புதிய பலத்துடன் நேர்மையாக அங்கம் வகிக்கும்." - என்றார்

## விலையோ உச்சம்

# அழுகிக் குப்பைக்கு செல்லும் மரக்கறிகள்

(நானுஓயா நிருபர்)

மரக்கறிகளின் விலைகள் உச்சமடைந்ததால் சில்லறை வியாபாரிகளும், நுகர்வோரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை, மரக்கறிகளும் அழுகிக் குப்பைக்குச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டில் நிலவிய கடும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையால் கடந்த சில வாரங்களாக சாதாரண மரக்கறிகளின் விலைகள் கூட உச்சம் தொட்டன. வழமையாக 500 ரூபா 600 ரூபாவுக்கு வாங்கக்கூடிய ஒரு கிலோ மரக்கறி விலைகூட ஆயிரம் ரூபாவை கடந்தது. குறிப்பாக ஒரு கிலோ கரட் விலை 2,500 ரூபாவைக் கூடத் தாண்டியிருந்தது.

தற்போதும் விலையில் பெரியளவு மாற்றம் இல்லை. அதிகரித்த வேகம் அவ்வாறே காணப்படுகின்றது. இதனால் சில்லறை வியாபாரிகளும், நுகர்வோரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மத்திய சந்தைக்கு வரும் அதிகமான நுகர்வோர் சாதாரண விலையில் உள்ள பலாக்காய், ஈரப்பலாக்காய், மரவள்ளிக்கிழங்கு, வட்டக்காய் போன்றவற்றையும், வல்லாரை, பொன்னாங்கன்னி, நாட்டுக் கீரை, பசளி போன்ற சாதாரண கீரை வகைகளையும் அதிகளவில் கொள்வனவு செய்கின்றனர்.

இதனால் ஏனைய பொருளாதார நிலையங்களில் இருந்து அதிக விலையில் மரக்கறிகளைக் கொள்வனவு செய்து, நுவரெலியா மத்திய சந்தைக்கும் , நானுஓயா பிரதான நகருக்கும் கொண்டு வந்து சிறிய இலாபத்தை வைத்து விற்பனை செய்யும் வியாபாரிகள், வியாபாரம் இன்றி பரிதவிக்கின்றனர். தமக்குப் பாரிய நட்டம் ஏற்படுகின்றது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.



“மரக்கறி விலைகள் அதிகரித்துள்ளதால், கூலித்தொழில் செய்யும் சாதாரண மக்கள் குறைந்த விலையில் உள்ள மரக்கறிகளைத் தேடுகின்றனர். சொற்ப அளவு கேட்கின்றனர். இதனால் வியாபாரம் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. எமக்குப் பெரும் நட்டம் ஏற்படுகின்றது.” - என்று வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் வெளி மாவட்டத்தில் இருந்து அதிக விலைக்கு கொள்வனவு செய்து மரக்கறிகளை குறைந்த விலைக்கே விற்பனை செய்கின்றோம். ஆனால், நுகர்வோரின் வருகை குறைவாகவே காணப்படுகின்றது. இதனால் மிஞ்சும் மரக்கறிகளைக் குப்பையில் போட வேண்டியதாக இருக்கின்றது என வியாபாரிகள் அங்கலாய்ந்துக் கொள்கின்றனர்.

தொடர்ந்து இவ்வாறு மரக்கறிகளை மொத்த விலைக்குக் கொள்வனவு செய்து குறைவான விலைக்கு விற்பனை செய்வதால் தங்களுக்கு எந்த இலாபமும் இல்லை. இதில் மின்சாரப் பட்டியல் கட்டணத்தைக் கட்டுவதா? வீட்டுச் சுமையைச் சரி செய்வதா? கடைக் கூலியைக் கட்டுவதா? கடையில் தொழிலுக்கு வருபவர்களுக்குச் சம்பளம் வழங்குவதா? போன்ற வினாக்கள் அனைத்து மரக்கறி வியாபாரிகள் மத்தியிலும் எழுந்துள்ளன.

அத்துடன் நுவரெலியா, நானுஓயா பிரதான நகரில் ஒரு சில மரக்கறி விற்பனை நிலையங்களில் பாவனைக்கு உதவாத அழுகிய நிலையில் மரக்கறிகளை வர்த்தக நிலையங்களுக்கு முன் சேர்த்து வைக்கப்பட்டுள்ள நிலையில் இவை மேலும் பழுதடைந்து துர்நாற்றம் வீசுகின்றன என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

# மரக்கறி மட்டுமல்ல பழங்களின் விலைகளும் திடீரென எகிறின

(நானுஓயா நிருபர்)

நாட்டில் மரக்கறி வகைகளின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில் பழங்களின் விலைகளும் எகிறியுள்ளன.

நுவரெலியாவில் அனைத்து வகையான பழங்களின் விலைகளும் அதிகரித்துள்ளன என்று பழங்கள் மொத்த வியாபாரிகள், சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் தெரிவிக்கின்றனர்.

கடும் மழையுடனான சீரற்ற காலநிலையால் பழங்களின் விளைச்சல் குறைவடைந்துள்ளது. அத்துடன், இறக்குமதிச் செலவும் அதிகரித்துள்ளது. விலை அதிகரிப்புக்கு இதுவே காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி ஒரு கிலோகிராம் நெல்லியின் விலை 1200 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் சிவப்பு திராட்சையின் விலை 2,500 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது. ஒரு கிலோகிராம் அன்னாசிப்பழத்தின் விலை 700 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது. அத்துடன் அப்பிள், ஓரஞ்சு உள்ளிட்ட ஏனைய பழங்களின் விலைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

மேலும் பழங்களின் விலை உயர்வால் விற்பனை குறைந்துள்ளது என்றும் விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## தமிழரசுத் தேசிய...

*கௌரவ. சிவஞானம் சிறிதரன்,*
*தலைவர்,*
*இலங்கை தமிழரசுக் கட்சி,*
*30, மார்ட்டின் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*மதிப்பார்ந்த தலைவர் அவர்கட்கு,*
*17 ஆவது தேசிய மாநாடு*

முதலிலே தமிழ் மக்களின் முதன்மைக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக பொறுப்பேற்றுள்ள தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற வாக்கெடுப்பிலே தாங்கள் அதிகப்படியான வாக்குகளாலே தெரிவுசெய்யப்பட்டமை எமது கட்சியின் வரலாற்றிலும் இந்நாட்டின் வரலாற்றிலும் ஒரு முன்னுதாரணமாக திகழும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. வாக்கெடுப்பில் கலந்துகொண்ட பொதுச்சபை உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட முறைகள், யாப்புக்கு முரணாக பலர் சேர்த்துக்கொள்ளப்பட்டமை சம்பந்தமாக பல நியாயமான கருத்துக்கள் வெளிப்பட்டாலும், போட்டியாளன் என்றவகையிலே அந்த முடிவை நான் முழுமையாக, பகிரங்கமாக ஏற்றிருக்கின்றேன். இது எங்கே சவாலுக்குற்படுத்தப்பட்டாலும் இந்த முடிவு என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்ற என்னுடைய உறுதியான நிலைப்பாட்டை நான் தொடர்ந்தும் பேணுவேன் என்பதை மீளவும் எழுத்தில் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். பல குறை நிறைவுகளோடு ஒரு தேர்தல் நடைபெற்றாலும் அதில் பங்குபற்றிய பின்னர் தோல்வியுற்றதன் காரணமாக அந்த முறைமை தவறென்று சொல்லுகின்ற முன்னுக்குப்பின் முரணான செயலை நான் எப்போதும் செய்ய மாட்டேன்.

மாநாட்டை ஒட்டிய மத்திய செயற்குழு கூட்டம், அமைப்பு விதி 10 இன் படி கடந்த 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு திருகோணமலை JKABS Beach Resort Hotel இல் கூடியபோதும் அதன் பின்னர் அமைப்பு விதி 7 (இ) இன்படி விஷயாலோசனை சபையாக பொதுச்சபை கூடிய போதும், பதில் பொதுச் செயலாளர் வைத்தியர் பா.சத்தியலிங்கம் சமுகமளித்திருக்காத சூழ்நிலையில் பிரதிப் பொது செயலாளராகிய நான் அக்கூட்டங்களின் செயலாளராக கடமையாற்றியவன் என்ற வகையில் கீழ்வரும் விடயங்களை தங்கள் மேலான கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றேன்.

1. மத்திய செயற்குழுக் கூட்டத்தின் ஆரம்பத்தில் தாங்கள் என்னைக் கூட்டத்தின் பின்புறத்திற்கு அழைத்துத் தனியாகப் பேசிய வேளையில் இரண்டு அணிகளாகப் பிரிந்திருக்கும் கட்சி ஒன்றித்து பயணிக்க வேண்டும் என்ற கருத்தை தாங்கள் சொன்னபோது, அப்படி நிகழ்வதாக இருந்தால் தாங்கள் தலைவராகவும், நான் பொதுச் செயலாளராகவும் இருந்தால் மாத்திரமே அது சாத்தியமாகும் என்று உங்களுக்குச் சொன்னேன். ஆனால் அது முற்றுமுழுதாக உங்களது கையிலேயே இருக்கின்றது என்பதையும் கூறினேன். அப்படியாக நாங்கள் இருவரும் இயங்குவது சம்பந்தமாக தங்களுக்குப் பூரண இணக்கப்பாடு உள்ளது என்பதை கூறிய நீங்கள், கிழக்கு மாகாணத்திற்குப் பொதுச் செயலாளர் பதவி கொடுக்கப்பட வேண்டுமென்கின்ற எதிர்பார்ப்பை எப்படிப் பூர்த்திசெய்ய வேண்டும் என்ற வினாவினை எழுப்பியிருந்தீர்கள். அதனைக் கூட்டத்தின்போது மற்றவர்களோடு பேசித் தீர்ப்போம் என்று நான் கூறிய பின்னரே கூட்டம் ஆரம்பமானது.

2. கூட்டத்தின் ஆரம்பத்தில் சிரேஷ்ட உபதலைவர் பதவியை தாங்கள் எனக்கு கொடுப்பதாக பெருந்தன்மையோடு முன்வந்தபோது, நான் அதனை நிராகரித்ததற்கான காரணமும் மேற்சொன்ன எமது கலந்துரையாடல் தான். அதையே நான் கூட்டத்திலேயும் கூறியிருந்தேன். ஒரு பொது இணக்கப்பாட்டை எய்துவதற்கு இரண்டு இலக்குகள் அடையப்பட வேண்டும் என்று நான் அவற்றை அடையாளப்படுத்தினேன்.

a) தலைவர் தெரிவிலே பிரிந்திருப்பதாக காணப்படும் இரு அணிகளும் ஒன்றுசேர்வது.

b) பொதுச் செயலாளர் பதவி கிழக்கு மாகாணத்தை சேர்ந்த ஒருவருக்கு வழங்கப்படுவது.

இந்த யோசனையை ஏற்றுக்கொண்ட தாங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த திரு. பா. அரியநேத்திரன், திரு. சீ.யோகேஸ்வரன், திரு. ஞா. ஸ்ரீநேசன் ஆகியோரோடு உரையாடிவிட்டு திருகோணமலை மாவட்ட கிளைத்தலைவர் திரு.சண்முகம் குகதாசன் அவர்களை "மட்டக்களப்பின் சம்மதத்தோடு" பொதுச்செயலாளர் பதவிக்குத் தெரிவு செய்வதாக அறிவித்தீர்கள். இதை மத்திய செயற்குழு எவ்வித ஆட்சேபனையுமின்றி ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. இந்த முன்மொழிவை பொதுச்சபைக்கு மத்திய செயற்குழுவின் சிபாரிசாக முன்வைப்பதென்றும் இணங்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக பொதுச்சபையிலே இந்த முன்மொழிவுக்குப் போட்டியாக மத்திய செயற்குழு உறுப்பினர் இன்னொருவரின் பெயரை யாரவது முன்மொழிந்தால் அந்தப் பெயருக்குரியவர் அந்தப் போட்டியிலிருந்து தான் வாபஸ் பெறுவார் என்றும் இணங்கப்பட்டது.

3. பொதுச் செயலாளர் பதவிக்கு இப்படியாக ஓர் இணக்கப்பாடு ஏற்பட்டதன் காரணமாக, மற்றைய பதவி நிலைகளுக்கும் சேர்ந்து ஓர் இணக்கப்பாட்டிற்கு வருமாறு உங்களையும் என்னையும் மதியசெயற்குழு உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து கேட்டுக்கொண்டதற்கிணங்க

நாம் இருவரும் மேடையில் அமர்ந்திருந்து இரு தரப்பினரின் பாரிய விட்டுக்கொடுப்புக்களோடு அப்படியானதொரு இணக்கப்பாட்டை எய்தினோம். இதிலே தலைவர் ஸ்தானத்தில் இருந்திருந்தும் கூட பல விட்டுக்கொடுப்புக்களை செய்ய நீங்களும் முன்வந்ததை நான் மனதார மெச்சுகிறேன்.

4. இதைத் தொடர்ந்து பொதுச்சபை கூடியபோது அமைப்புவிதி 13 (c) 1. இன்படி தலைமைதாங்கிய நீங்கள் மத்திய செயற்குழுவின் பிரேரணையை பொதுச்சபையில் முன்வைத்தீர்கள். பல வாதப்பிரதிவாதங்கள், சண்டைகள் நிகழ்ந்தாலும் கூட, நீங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி மத்திய செயற்குழுவின் யோசனையை தங்களது முன்மொழிவாக பிரேரித்தீர்கள். அதை திரு. பீட்டர் இளஞ்செழியன் வழிமொழிந்தார். மாற்று முன்மொழிவு எதுவும் இல்லாத நிலையில் பொதுச்சபை இதை ஏற்றுக்கொண்டது. இதை தாங்கள் கையாண்ட விதம் தங்களது ஆளுமையின் வெளிப்பாடு என்பதை அந்த நேரத்திலேயே நான் தங்களைப் பாராட்டியிருந்தேன் என்பதை தற்போது பதிவு செய்கிறேன். மதிய உணவுக்காக கூட்டம் கலைந்தபோது, திரும்பவும் கூடவேண்டிய தேவை இல்லை என்று பலர் சொன்னபோது, முன்னாள் தலைவர்

(5ஆம் பக்கம் பார்க்க)

## நீர்த்தேக்கத்திலிருந்து...

55 வயது மதிக்கத்தக்க நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் இன்னும் அடையாளம் காணப்படவில்லை. சிவப்பு நிற ஆடை அணிந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



**தமிழரசுத் தேசிய...**

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் மாநாட்டு தீர்மானங்கள் சம்பந்தமாக பேசவேண்டும் என்று கூறியதன் காரணத்தால்தான் மதிய உணவுக்கு பின்னர் மீண்டும் கூட நேர்ந்தது.

5. மதிய உணவு இடைவேளைக்குப் பின் பொதுச்சபை மீண்டும் கூடியபோது, தங்களால் முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட்டு, சபை முன்னர் ஏற்ற தீர்மானத்தை இப்போது தமது நிலைப்பாட்டை மாற்றி அதனை நிராகரிப்பதாக ஒரு சிலர் குழப்பம் விளைவித்தனர். வாக்கெடுப்பு நடத்தபபடவேண்டும் என்றும் தொடர்ச்சியாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். ஏற்கனவே இடைவேளைக்கு முன்னர் சபை ஏற்றுக் கொண்ட தீர்மானத்தை மீண்டும் பரிசீலிக்க முடியாதென்று சொன்னதையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை அதனால், நீண்ட இழுபறிக்குப்பின் அந்த வாக்கெடுப்பை செயலாளர் ஸ்தானத்திலிருந்து நடத்துமாறு தாங்களும் என்னைக் கேட்டுக்கொண்டீர்கள். அப்படி வாக்கெடுப்பை நடத்த என்னைப் பணிப்பதாக முன்னாள் தலைவரும் ஒலிபெருக்கி மூலமாக அறிவித்தார். வாக்கெடுப்பு நடத்தப்படுவது முறையற்றது என்ற கருத்தினை நான் கொண்டிருந்தபோதும் தங்கள் இருவரினதும் பணிப்புரைக்கமைய இவ்வாக் கெடுப்பை நடத்தினேன். அந்த வாக்கெடுப்பு எவ்வித குழப்பமுமின்றி ஒழுங்காக அவசரமின்றி நடத்தப்பட்டது தாங்கள் அறிந்ததே. மத்திய செயற்குழுவின் முன்மொழிவை ஏற்றுக்கொள்கிறவர்கள் முதலிலே கைகளை உயர்த்திக் காண்பித்தார்கள். அவை நிரை நிரையாக ஒழுங்காக எண்ணப்பட்டன. நான் அதனை ஒலிபெருக்கி மூலமாக எண்ணுகிறபோது, வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டுமென்று கூறியிருந்த திரு. கருணாகரன் நாவலன் அவர்களும் கூடவே எழுந்துநின்று உயர்த்தப்பட்ட கைகளை எண்ணி இறுதியிலே அதன் தொகை 112 என்பதை உறுதிப்படுத்தினார். அதன் பின்னர், மத்திய செயற்குழுவின் தீர்மானத்தை எதிர்ப்பவர்கள் கைகளை உயர்த்தியபோது அவர்களின் தொகை 104 என்று என்னாலும் திரு. நாவலன் அவர்களாலும் உறுதிப்படுத்தப்பட்டது. வாக்களிப்பிக்கை நடத்தி விட்டு நான் வந்து அமர்ந்தபோது அதன் முடிவை அறிவிக்குமாறு நீங்கள் கேட்டுக்கொண்டதற்கமைய மீளவும் நான் ஒலிபெருக்கியிடம் சென்று, முடிவை அறிவித்தேன். அப்படியாக அது பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர், அடுத்த நாள் அதாவது 28.01.2024 அன்று மாநாட்டுக்காக கூடுவோம் என்று அறிவித்ததோடு கூட்டம் உத்தியோகபூர்வமாக கலைக்கப்பட்டது.

மத்திய செயற்குழுவினுடைய முன்மொழிவை பொதுச்சபை மதிய உணவு இடைவேளைக்கு முன்னரே ஏற்றிருந்த வேளையில், அது சம்பந்தமாக திரும்பவும் வாக்கெடுப்பொன்று நடாத்துவது தேவையற்றதும் முறையற்றதும் என்று நான் கூறியிருந்த பொழுதிலும், அப்படியான வாக்கெடுப்பை ஒரு சிலர் வலியுறுத்துகிறார்கள் என்ற காரணத்திற்காக அதை நடத்துமாறு என்னைப் பணித்திருந்தீர்கள். அப்படியாக வலியுறுத்தியவர்கள் அந்த வாக்கெடுப்பிலே முற்றுமுழுதாக கலந்து கொண்டார்கள். அது மட்டுமல்ல உயர்த்திய கைகளை எண்ணுகிற பணியிலும் சேர்ந்து ஈடுபட்டு அந்த எண்ணிக்கைகளை உறுதிப்படுத்தினார்கள். ஆகவே அந்தத் தீர்மானம் ஒரு தடவை அல்ல, இரண்டு தடவைகள் அவர்கள் கேட்டுக் கொண்ட முறைக்கு அமைவாகவும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. வாக்கெடுப்பில் கலந்து கொண்டபிறகு அதில் தோற்ற காரணத்தினால் வாக்கெடுப்பு முறை தவறென்று சொல்லுவது முறைகேடான செயலென்பதற்கப்பால் சட்டத்தின் அடிப்படையிலும் அது ஏற்றுக் கொள்ளப்பட முடியாத ஒரு நிலைப்பாடு. வென்றால் முறைமை சரி, தோற்றால் முறைமை பிழை என்பது கீழ்த்தரமான செயற்பாடாகும். குற்றவியல் சட்டக் கோட்பாடுகளிலே இதனை VOLUNTI NON FIT INJURIA என்பார்கள். இதற்குரிய சிறந்த உதாரணம்: குத்துச்சண்டை மேடைக்குள்ளே தானாக இறங்கியபிறகு தன்னை மற்றவர் அடிக்கிறார் என்று குற்றம் சொல்ல முடியாது. குடியியல் சட்டக் கோட்பாடுகளில் இதனை ACQUIESCENCE என்றும் ESTOPPEL BY CONDUCT என்றும் சொல்வார்கள்.

எமது கட்சி யாப்பு விதிகளுக்கு அமைவாகவும், சட்டப்படியும் தாங்களே இப்பொழுது இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர். 28.01.2024 ஞாயிற்றுக்கிழமையன்று கோலாகலமாக நடைபெறவிருந்த பொது நிகழ்வு தவறான ஆலோசனைகளின் பேரிலும், கலந்துரையாடல் இன்றியும், அதிகாரமற்றதும் சட்டத்துக்கு முரணான அறிவிப்பினாலும் துரதிர்ஷ்டவசமாக பிற்போடப்பட்டுவிட்டது. எமது வரலாற்றில் முதன் முறையாக வாக்கெடுப்பினாலே தெரிவுசெய்யப்பட்ட தலைவராகிய நீங்கள் அப்படியான அதற்குகந்த விமர்சையோடு வைபவரீதியாக பதிவியேற்பது முக்கியமான விடயமாகும். அதுமட்டுமல்லாமல், தங்களது தலைமையுரையில் எமது மக்களுக்கான விடிவுப் பாதை எப்படியானது என்ற தங்களது யோசனைகளை செவிமடுக்கப் பலரும் காத்திருந்தார்கள். அத்தோடு, எமது மக்கள் மத்தியில் எழுந்திருக்கும் பல்வேறு சந்தேகங்களுக்கும் விமர்சனங்களுக்கும் அது முற்றுப்பள்ளி வைத்திருக்கும். ஆகவே தயவு செய்து காலம் தாழ்த்தாது வெகு விரைவில் அந்த பகிரங்க பொது நிகழ்வை நடாத்துமாறும் அன்புரிமையோடு நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த விடயம் சம்பந்தமாக பலதரப்பட்ட குழப்பமான செய்திகள் பொது வெளியில் பரவுகின்ற காரணத்தினாலே கட்சியின் நலன் கருதி இக் கடிதத்தை ஊடகங்களுக்கும் வெளியிடுகின்றேன்.

தங்கள் உண்மையுள்ள,
ம. ஆ. சுமந்திரன்,
முன்னாள் பிரதிப் பொதுச் செயலாளர்.

– என்று உள்ளது.

# கல்முனை மாநகர சபைக்கு கிழக்கு ஆளுநர் விஜயம்

(ஏ.எஸ்.மௌலானா)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கல்முனை மாநகர சபைக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

ஆளுநருடன் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப், மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் உள்ளிட்ட அதிகாரிகளும் வருகை தந்திருந்தனர்.

இதன்போது கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி, தலைமையிலான அதிகாரிகளுடன் மாநகர சபையின் கீழ் உள்ள முக்கிய நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவது குறித்து ஆளுநர் கலந்துரையாடியுள்ளார்.

அத்துடன், கல்முனை பொது நூலகம், பொதுச் சந்தை, பிஸ்கால் காணி என்பவற்றையும் கிழக்கு மாகாண ஆளுநர் பார்வையிட்டு அவற்றை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்தார்.

கல்முனை பொது நூலக கட்டடத் தொகுதியில் செயற்படும் மாநகர சபையின் நிர்வாக அலுவலகத்தை இங்கிருந்து, அகற்றி இந்த நூலகம் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்று முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஏ.ஏ.கபூர் மற்றும் கல்முனையன்ஸ் போரம் உள்ளிட்ட சிவில் அமைப்பினர் விடுத்த கோரிக்கையை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட ஆளுநர், அது குறித்த சாத்தியப்பாடுகள் தொடர்பில் அதிகாரிகாரிகளிடம் கேட்டறிந்து கொண்டார்.

இந்த நிகழ்வில், கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, மாநகர பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜௌஸி, வேலைகள் அத்தியட்சகர் வி.உதய குமரன் உள்ளிட்ட அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மீண்டும் 'அறகலய' வரலாம்

இனி நடைபெறக்கூடிய ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் வேறு தேர்தல் ஏதும் தேசிய ரீதியில் நடைபெற்றால் எதிர்க்கட்சிகளின் கை ஓங்கி, கள நிலைமை மாறி, அந்த ஜனாதிபதித் தேர்தலில் தமக்குத் தோல்வி நிச்சயமாகி விடும் என்று கணக்குப் போட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதன் காரணமாக கடந்த வருட முற்பகுதியில் நடைபெற்றிருக்க வேண்டிய உள்ளூராட்சி தேர்தலுக்கு ஆப்படித்தார்.

வேட்பு மனுக்களும் கோரி, முறைப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டு, உள்ளூராட்சித் தேர்தல் நடக்க இருக்கையில், நிதியமைச்சர் என்ற முறையில் தமக்கு இருந்த அதிகாரங்களை வைத்து தேர்தலுக்கான நிதி ஒதுக்கீடுகளை வெட்டி, சூட்சுமமான முறையில் அந்தத் தேர்தலை நடத்த விடாமல் தடுத்தார் அவர்.

இப்போது இன்னும் எட்டு மாதங்களில் ஜனாதிபதித் தேர்தல். அதற்கு ஏற்றாற்போல காய்களை நகர்த்தி, அரசியல் சூதாட்டத்தை முன்னெடுக்கின்றார் அவர். ஆனால் களத்தில்- அரசியல் புறச்சூழலில்- எதிர்வினைகள் அவர் எதிர்பார்க்கின்றமையைப் போல இல்லை என்பதுதான் விவகாரமாக உள்ளது.

தாம் ஜனாதிபதியானவுடன் அடக்கு முறையை ஏவி 'அறகலய' போராட்டத்தைத் தாம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டார் என்று ரணில் விக்கிரமசிங்க நினைத்தாலும், நிலைமை என்னவோ நீறு பூத்த நெருப்பாகவே கனன்று கொண்டிருக்கின்றது. மக்கள் எதிர்ப்பு அலை எனும் பெரும் காற்று சுழற்றி அடித்து வீசத் தொடங்கினால் கனன்று கொண்டிருக்கும் தணல் பற்றிப் பிடித்து பெரும் சுவாலையாக கிளர்ந்து, கொளுந்து விட்டு எரியும் ஏது நிலைகள் உள்ளன.

ஏற்கனவே பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் நேற்று முன்னெடுத்த மக்கள் பேரணியை நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை ஏவிக் குழப்பி அடித்து, எதிர்க்கட்சிகளின் கூட்டணியை உசுப்பேத்தி விட்டிருக்கின்றது அரசு.

ஏற்கனவே பல மட்டங்களிலும் அரசுக்கு எதிராகப் பல்கலைக்கழக மாணவர்கள் நெருப்பெடுத்துக் கொண்டிருக்கின்றனர். களனிப் பல்கலைக்கழகத்தில் நிலைமை மோசமான நெருக்கடி கட்டத்தை எட்டியுள்ளது.

தங்களது சம்பள முரண்பாடுகளை தீர்ப்பதற்கு ரணில் அரசுக்கு இன்று வரைக் காலக்கெடு வழங்கியுள்ள சுகாதார சேவைகளின் இணைந்த 72 சங்கங்கள் இனி எந்த நேரத்திலும் தொழிற்சங்கப் போராட்டத்தில் குதிக்கக்கூடிய சூழலே தென்படுகின்றது.

மக்களின் கருத்துச் சுதந்திரத்தை அப்பட்டமாகப் பறிக்கும் நிகழ்நிலைக்காப்புச் சட்டத்திற்கு எதிராக மக்களின் மனநிலையும் போராட்ட உணர்வும் சீறத் தொடங்கியிருக்கும் இச்சமயத்தில் அச்சட்ட மூலத்தை உயர்நீதிமன்ற உத்தரவுகளுக்கு மாறான முறையில் அரசு நிறைவேற்றி இருப்பதான குற்றச்சாட்டும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது. நாடாளுமன்ற நடைமுறைகளும் இந்த ஆட்சி பீடத்தின் கீழ் எதேச்சாதிகாரத்துக்குள் சிக்கி இருப்பது மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கின்றது.

பாதாள உலகக் குழுவினர், போதைப் பொருள் வர்த்தகத்தினர் ஆகியோருக்கு எதிரான 'பாய்ச்சல்' என்ற பெயரில் அரசு முன்னெடுத்திருக்கும் 'யுக்திய' நடவடிக்கை, பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு மாற்றீடாக அரசு கொண்டுவரும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் சர்ச்சைக்குரிய பிரிவுகள் என்று அரசு முன்னெடுக்கும் பல நடவடிக்கைகள் மக்கள் மனதில் அதிருப்தியையும் சந்தேகத்தையும் குழப்பங்களையும் தந்து நிற்கின்றமை கண்கூடு.

இவை நாட்டில் அடுத்து வரும் மாதங்கள் இளவேனிற் காலமாக இராது, கோடை இடி, மாரி மழை காலமாக அது மாறலாம் என்ற கருத்தைத் தந்துள்ளன.

பொருளாதார நெருக்கடி மோசமாக தாக்கியமையை அடுத்துத் தங்கள் போராட்டத்தை சற்றுக் காலம் அடக்கி வைத்திருந்த கல்வித் துறையினர்- குறிப்பாக ஆசிரியர் தொழிற்சங்கத்தினர் - தங்களது போராட்டக் கத்தியை மீண்டும் கூர் தீட்டத் தொடங்கி இருக்கின்றனர் என்று செய்திகள் வெளியாகின்றன.

போதாக்குறைக்கு அரசு புத்தாண்டு முதல் விதித்த புது வரிகளினால் பொருள்களின் விலைவாசி எக்கச்சக்கமாக எகிறி, மக்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டு, பொதுவான கருத்து நிலைப்பாடு அரசுக்கு எதிரான அதிருப்தியாக உச்சத்தைத் தொட்டு நிற்கின்றது.

இந்த நெருக்கடிகளின் பின்புலத்தில், ரணில் விக்கிரமசிங்க தமக்கு மீண்டும் மகுடம் சூட்டும் வாய்ப்பாக எதிர்பார்த்து நிற்கும் அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் மீண்டும் ஓர் அறகலய நிலைமை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.



# நிந்தவூரில் உணவகங்களில் திடீர் சோதனை

(நூருல் ஹுதா உமர்)

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவுகளிற்குட்பட்ட உணவகங்கள் மற்றும் கிழங்குக்கடை கள் திடீர்சோதனைக்குஉட்படுத்தப்பட்டுள்ளன.

இந்நடவடிக்கையில் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி கே.எல். எம் றயீஸின் வழிகாட்டலில் பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எம்.எம். பைசால் , பொதுச் சுகாதார பரிசோதகர், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் டெங்கு களத்தடுப்பு உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுகள், உணவுகளை கையாளுவதற்கு பொருத்தமற்ற உபகரணங்கள் மற்றும் பழைய எண்ணெய்கள் என்பன கைப்பற்றப்பட்டன.







# அல்-ஜலால் முன்பள்ளியின் வருடாந்த பட்டமளிப்பு விழா

(எஸ்.அஷ்ரப்கான்)

சாய்ந்தமருது அல்-ஜலால் முன்பள்ளியில் இருந்து தரம் O1 இற்கு செல்லவிருக்கும் மாணவர்களின் விடுகை மற்றும் புதிய முன்பள்ளி மாணவர்களை வரவேற்கும் நிகழ்வுகள் அன்மையில் இடம்பெற்றுள்ளன.

சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயத்தின் அதிபர் எம்.ஐ.எம். சைபுதீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வை முன்பள்ளி ஆசிரியைகளான எம்.சி. றிஸ்மியா, எம்.றுஹ்னா பேகம் ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக 'றியோ மார்க்கட்டிங்' நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் றிஸ்மீர் நைனா முஹம்மது சார்பில் அந்நிறுவனத்தின் 'கிவி' உற்பத்திப்பிரிவின் முகாமையாளர் றுமைஸ் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர் டீ.கே.எம். சிராஜ் உதவி அதிபர் எம்.ஏ.எம். சிராஜ் ஆகியோருடன், சாய்ந்தமருது பிரதேச செயலக முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.எம்.எஸ்.சிறீன், கல்முனை வடக்கு பிரதேச செயகல முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம். ஆயிஷா, ஓய்வு பெற்ற ஆசிரியர் எம்.ஐ.எம். முபாறக் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இதன் போது, மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் பரிசளிப்பு நிகழ்வுகளுடன் அதிதிகளுக்கான நினைவுச்சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.























# பன்னல பொலிஸாரின் சுற்றிவளைப்பில் கசிப்பு உற்பத்தி நிலையம் கண்டுபிடிப்பு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

குருநாகலை மாவட்டத்திலுள்ள பன்னல பிரதேசத்தில் பொலிஸாரின் சுற்றி வளைப்பில் பாரிய கசிப்பு உற்பத்தி நிலையம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பன்னல பொலிஸ் நிலைய பொறுப்பதிகார் விஜேசூரிய தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட திடீர் சுற்று வளைப்பின் போதே மேற்படி கசிப்பு உற்பத்தி நிலையம் அகியாழம் காணப்பட்டுள்ளது.

இதன்போது, 40 பரல்களில் கோடா, 6 எரிவாயு சிலிண்டர் மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன் படுத்தும் உபகரணங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என பன்னல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக பன்னல பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# கற்பிட்டி பிரதேச அபிவிருத்திக்கு 40 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

**(சியாஜ்)**

கற்பிட்டி பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டம் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி றஹீம் தலைமையில் இடம்பெற்றது.

கற்பிட்டி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இந்த கூட்டத்தில் இணைத் தலைவர் சிந்தக மாயாதுன்னவும் கலந்துகொண்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி றஹீம், 2024 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி, மாகாண சபை மற்றும் அமைச்சரவையினால் கிடைக்கப்பெற்றுள்ளன நிதிகள் உள்ளடங்கலாக இந்த வருடம் 40 மில்லியன் ரூபா நிதி கற்பிட்டி பிரதேச அபிவிருத்திக்காக செலவிடப்பட உள்ளது என்று தெரிவித்தார்.







## 'சவால்மிக்க காலங்களில் சமயங்களின் பங்கு'

# யாழ். பல்கலையில் நாளையும் மறுதினமும் கிறிஸ்தவக் கற்கை பிரிவின்ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புக்கள் பீடத்தில் கிறிஸ்தவக் கற்கைகளில் முதுமாணிப் பட்டத்தை வழங்கிவரும் கிறிஸ்தவ நாகரிகத்துறை, பொதுவெளி இறையியலுக்கான ஆசிய வலைப்பின்னலோடு இணைந்து 'சவால் மிக்க காலங்களில் சமயங்களின் பங்கு' என்னும் மையப்பொருளில் இரண்டாவது சர்வதேச ஆய்வு மாநாட்டை நாளை யும் மறுதினமும் நடாத்தவுள்ளது.

அனைத்து மக்களின் பொதுவாழ்வு, பொதுநலன்கள் ஆகியவற்றோடு தொடர்புபட்ட பல்வேறு தளங்களில் எவ்வித பாரபட்சமுமின்றிச் செயற்படும் குறிப்பிடத்தக்க பங்காளியாக ஆசியச் சூழமைவில் கிறிஸ்தவம் திகழ்கிறது. ஆகவே கிறிஸ்தவ கற்கைகளில் நடாத்தப்படும் இரண்டாவது அனைத்துலக ஆய்வு மாநாடானது இலங்கையிலும் பல்வேறு ஆசிய நாடுகளிலும் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்காகவும், ஜனநாயகத்தின் முக்கிய அம்சங்களைப் பேணுவதற்காகவும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய கிறிஸ்தவத்தின் முயற்சிகளை அறிவியல் பூர்வமான முறையியல் சார்ந்த ஆய்வுகளின் வழியாக ஆவணப்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது.

மேலும் 2024 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன்விழா ஆண்டாகவும் அமைவதனால் அப் பொன் விழாவின் நினைவு நிகழ்வுகளில் ஒன்றாக அமையவிருப்பது இதன் சிறப்பை இரட்டிப்பாக்குகின்றது.

மேலும் 'கிறிஸ்தவக் கற்கைகளில் முதலாவது அனைத்துலக ஆய்வு மாநாடு' யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ நாகரிகத் துறையால், யாழ்ப்பாணத் திருமறைக் கலாமன்றத்தின் அனுசரணையோடு 2018ம் ஆண்டு மார்கழி மாதம் 07 ஆம், 08 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



# கிழக்கு மாகாண ஆளுநரால் மீனவர்களுக்கு வாடி உத்தரவு பத்திரம் வழங்கப்பட்டது

(எம்.ஏ.ஏ.அக்தார்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் கல்முனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட 14 மீனவர்களுக்கு வாடி உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டது

கல்முனை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட 14 மீனவர்களுக்கான வாடி உத்தரவு பத்திரம் கையளிக்கும் நிகழ்வு கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதியாக திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கல்முனை பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழு தலைவருமான எஸ்.எம்.எம்.முஷாரப் மற்றும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணன், கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி, உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





# அஸ்றப் வித்தியாலயத்தில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(எம்.ஏ.ஏ.அக்தார்)

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஷ்ரப் வித்தியாலயத்தில் சிறுவர் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்களுக்கான தும்,வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கானது மான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

அதிபர் ஜனாப்.எம்.ஐ. சம்சுதீன் தலைமையில்இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதி அதிபர், உதவி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.











# நானாட்டானில் மோ. சைக்கிள்கள் மோதி விபத்து; இளம் தாய் காயம்!

(மன்னார் நிருபர்)

நாட்டான் பஸ் நிலையத்தின் முன்பாக உள்ள பிரதான வீதியில் இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் இளம் தாய் ஒருவர் காயமடைந்து நானாட்டான் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவர் நானாட்டான் அச்சங்குளம் கிராமத்தை பிறப்பிடமாகவும் அரிப்பு துறையை வசிப்பிடமாகவும் கொண்டவர் என்று தெரிய வருகிறது.

அரிப்புத்துறை பகுதியிலிருந்து வங்காலை நோக்கி ஆண் ஒருவர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிளும் நாட்டான் பஸ் தரிப்பிடத்தில் இருந்து அரிப்பு துறை நோக்கி குழந்தை ஒன்றுடன் பயணித்த இளம் தாயின் மோட்டார் சைக்கிளுமே மோதி விபத்துக்குள்ளாகின.

விபத்தில் தாய் காயங்களுக்கு உள்ளாகிய போதும் குழந்தை காயம் எதுவுமின்றி தெய்வாதீனமாகத் தப்பியுள்ளது.

காயமடைந்த தாய் மற்றும் மகள் இருவரும் அருகில் உள்ள நானாட்டான் பிரதேச மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.



# சம்மாந்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

(சம்மாந்துறை நிருபர்)

சம்மாந்துறை பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபாவின் ஏற்பாட்டில் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம் அதாவுல்லா தலைமையில் இந்த கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசீம், கணக்காளர் ஐ.எல் பாரீஸ் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம், திணைக்களங்களின் பிரதிநிதிகள், மஜ்லிஸ் சூறா பிரதிநிதிகள், பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இந்த அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் பிரதேச காணிப் பிரச்சினைகள், மையவாடி மற்றும் பாடசாலைகளுக்கு காணி விடுவிப்பு விடயங்கள், நீர்பாசனம் சார்ந்த முன்மொழிவுகளும் அதற்கான தீர்வுகளும், விவசாயம் சார்ந்த முன்மொழிவுகளும் அதற்காம தீர்வுகளும், நகரமயமான கிராமங்களின் அபிவிருத்தி விடயங்கள் போன்றவர்கள் பல விடயங்கள் கலந் தாலோசிக்கப்பட்டு முடிவுகளும் எடுக்கப்பட்டன.



## கல்வெட்டை இடித்துச் சேதப்படுத்திய குற்றச்சாட்டு

# ரெலோ செயலர் ஹென்றி மகேந்திரனை தண்டம், நஷ்டஈடு செலுத்துமாறு தீர்ப்பு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை கல்முனை நகரில் எம்.எஸ்.காரியப்பர் வீதி என பெயரிடப்பட்ட நினைவுப்படிகத்தை இடித்து தரை மட்டமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக வழக்கில் பிரதிவாதியான ரெலோ இயக்கத்தின் செயலாளர் நாயகமும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் எதிர்கட்சித் தலைவருமாகிய ஹென்றி மகேந்திரனுக்கு 1,500 ரூபா தண்டபணமும் 55 ஆயிரம் ரூபா நஷ்டஈடும் விதித்து கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

2015 ஆண்டு அம்பாறை கல்முனை நகரில் 'எம்.எஸ்.காரியப்பர் வீதி' எனப் பெயரிடப்பட்ட நினைவுப்படிகம் ரெலோ இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஹென்றி மகேந்திரன் என்பவரால் இடித்து தரை மட்டமாக்கப்பட்டிருந்தது. இதன் பின்னர் சட்ட விரோதமாக கூட்டம் கூடியமை மற்றும் மாநகர சபைக்குச் சொந்தமான உடைமையை சேதப்படுத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் கல்முனை பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றப் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

கடந்த 09 வருடங்களாக இவ்வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை இந்த வழக்கு கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் பாதிக்கபட்ட தரப்பினர் உட்பட ஏனைய தரப்பினரின் விடயங்களை ஆராய்ந்த நீதிவான் வீதிப் பெயர் பலகை உடைத்த ஹென்றி மகேந்திரனைக் குற்றவாளியாக இனங்கண்டு மேற்படி தண்டனைக்கு உத்தரவிட்டார்.

பிரதிவாதி சார்பாக சட்டத்தரணிகள் என்.சிவரஞ்சித், என் மதிவதனன் ஆகியோர் முன்னிலையாகினர்.

**செய்திப் பின்னணி**

கல்முனை பிரதான நெடுஞ் சாலையில் இருந்து சந்தாங்கேணி விளையாட்டு மைதானத்திற்கு செல்லும் பாதைக்கு கல்முனை மாநகர சபையினால் கேட் முதலியார் எம்.எஸ்.காரியப்பரின் பெயர் சூட்டப்பட்டு, கடந்த 2015.08.09ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பங்கேற்புடன் அப்போதைய முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமதினால் இவ்வீதியை திறந்து வைப்பதற்காக மாநகர சபையினால் அப்பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று நிறுவப்பட்டிருந்தது.

இப்பெயர் சூட்டலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அன்றைய தினம் பிரதமரின் வருகைக்கு முன்னதாக ஹென்றி மகேந்திரன் தலைமையில் பேரணியாக சம்பவ இடத்திற்கு வந்த சிலர் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஹென்றி மகேந்திரன் பெரும் சுத்தியல் ஒன்றினால் அந்தக் கல்வெட்டை அடித்து நொறுக்கி விட்டுச் சென்றிருந்தார் என்று கூறப்பட்டது.

அதன் பின்னர் அப்போதைய கல்முனை மாநகர முதல்வர் நிஸாம் காரியப்பரின் பிரத்தியேக செயலாளர் ரீ.எல்.எம்.பாறூக்கினால் கல்முனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஹென்றி மகேந்திரன் கைது செய்யப்பட்டு, 75 ஆயிரம் ரூபாவுடன் இரண்டு சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் கல்முனை பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தொடர்ச்சியாகவே நேற்றைய தினம் விசாரணை இடம்பெற்றது.





# மணிப்பூரில் மீண்டும் பதற்றம்: துப்பாக்கி சூட்டில் இருவர் பலி!

மணிப்பூர் மாநிலத்தில் குக்கி, மெய்த்தி பிரிவினரிடையே தொடரும் மோதல் நிலைக்கு மத்தியில் நேற்று துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இரு தரப்புக்கும் இடையேயான துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர், ஒருவர் காணாமல் போயுள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனால், அந்த பகுதியில் மீண்டும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

மணிப்பூர் மாநிலத்தில் கடந்த ஆண்டு மே மாதம் இரு பிரிவினர் இடையே ஏற்பட்ட மோதல் காரணமாக கலவரம் வெடித்தது.

இதில் நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். இதையடுத்து, பல நாள்கள் வன்முறை சம்பவங்கள் நடைபெற்றதால், இந்தியா முழுக்க பரபரப்பு ஏற்பட்டது.

வன்முறையை கட்டுக்குள் கொண்டு வர அந்த மாநிலத்தில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டதை தொடர்ந்து, மணிப்பூரில் நிலைமை சீராக ஆரம்பித்தது.

எனினும், அந்த பகுதியில் தொடர்ந்தும் வன்முறை சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டே தான் வருகிறது.

அந்த வகையில், கடந்த சில தினங்களுக்கு முன்பு பாதுகாப்பு படையினர் மீது மர்ம நபர்கள் துப்பாக்கிச் சூடு மற்றும் வெடிகுண்டு தாக்குதல் நடத்தினர்.

இந்த வரிசையில், நேற்று மணிப்பூரில் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. நேற்றைய தாக்குதலில் இரண்டு பேர் உயிரிழந்தனர். ஐந்து பேர் காயமடைந்தனர் என தகவல்கள் வெளியாகி உள்ளன.

# சீன ஆதிக்கம் கண்டு இந்தியா பயப்படாது

## இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கருத்து

"இந்தியாவுக்கு பெரும் சவாலாக மாறியுள்ள சீனாவை கண்டு நாம் பயப்பட மாட்டோம். "

– இவ்வாறு இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மும்பையில் உள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்தில் மாணவர்களுடன் உரையாடிய ஜெய்சங்கர், கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்தியாவுக்கு பெரும் சவாலாக



மாறியுள்ள சீனா, பொருளாதார ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் தன்னை பலப்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

குறிப்பாக, தெற்காசியாவில் தனது செல்வாக்கை உயர்த்தி கொள்வதில் மும்முரமாக செயல்பட்டு வருகிறது. பாகிஸ்தான், இலங்கை வரிசையில் மாலைதீவு அரசுடன் நெருக்கமான உறவை சீனா பேணி வருகிறது.

இது, இந்தியாவுக்கு பெரும் தலைவலியாக மாறியுள்ள நிலையில், புதிய மாலைதீவு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் இந்தியாவுக்கு புதிய சிக்கலை உண்டாக்கியுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)



# சென்னையிலிருந்து அயோத்திக்கு தினசரி நேரடியான விமான சேவை

சென்னையில் இருந்து அயோத்திக்கான தினசரி நேரடி விமான சேவை ஆரம்பமாகவுள்ளது.

இதன்படி, எதிர்வரும் முதலாம் திகதி முதல் இந்த சேவைகள் ஆரம்பமாகவுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மும்பை, பெங்களூர், அகமதாபாத், ஜெய்ப்பூர் உள்ளிட்ட நகரங்களுக்கும் அயோத்தியில் இருந்து நேரடி விமான சேவை ஆரம்பமாக வுள்ளது.

அத்துடன், மும்பை, பெங்களூர், அகமதாபாத், ஜெய்ப்பூர் உள்ளிட்ட நகரங்களுக்கும் அயோத்தியில் இருந்து நேரடி விமான சேவை ஆரம்பமாக வுள்ளது.

மத்திய விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஜோதிராதித்யா சிந்தியா இந்த விமான சேவையை ஆரம்பித்து வைக்க உள்ளார்.

உத்தர பிரதேச மாநிலம் அயோத்தியில் கட்டப்பட்டுள்ள ராமர் கோவில் பிரதிஷ்டை விழாவை தொடர்ந்து, நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து அயோத்திக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகிறது.

குறிப்பாக தென்னிந்தியாவில் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ராமர் கோவிலுக்கு தினசரி பயணம் செய்கின்றனர்.

இந்த நிலையில், மேற்படி நடவடிக்கையை துரிதப்படுத்தும் நோக்கில் அயோத்திக்கான நேரடி விமான சேவை ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீன ஆதிக்கம் கண்டு இந்தியா பயப்படாது

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாலைத்தீவில் உள்ள இந்திய இராணுவத்தை வெளியேற்ற காலக்கெடு விதித்ததில் இருந்து இந்தியாவுக்கு எதிராக மாலைதீவு அமைச்சர்கள் கருத்து தெரிவித்தது வரை தொடர்பதற்றம் நீடித்து வருகிறது. இதற்கிடையே, சீன உளவு கப்பல் ஒன்று இந்திய பெருங்கடலில் நுழைந்து அது மாலைதீவை நோக்கி சென்றதாக தகவல் வெளியானது.

மாலைதீவு தலைநகர் மாலேவை நோக்கி சீன கப்பல் சியாங் யாங் ஹாங் 03 சென்றதாக கூறப்படுகிறது. இது, இந்திய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

இந்தியாவின் அண்டை நாடுகளில் சீனா ஆதிக்கம் செலுத்தும் என்பதை ஒப்புக்கொள்வது அவசியம், ஆனால், இம்மாதிரியான அரசியலை கண்டு இந்தியா பயப்படக்கூடாது.

சீனா நேராக போரிட்டால் நாம் பயப்படாமல் எதிர்கொள்ளலாம். ஆனால் இந்த குள்ளநரி சீனா, கொரோனா போன்ற கொடிய வைரஸ்களை கண்டுபிடித்து, அதை பரப்பி நம்மை கொல்ல நினைக்கின்றன.

அதையும் நாம் திறமையாக எதிர்கொண்டோம். தடுப்பூசி கண்டுபிடித்து உயிர்பலிகளை தடுத்தோம். இப்பொழுது புதுசாக இந்த குள்ளநரி சீனா, செயற்கையாக இயற்கை பேரிடர் உருவாக்கி, இந்திய பகுதிகளில் அதிக மழை பெய்வித்து, வெள்ளம் ஏற்படுத்தி, இந்தியாவை அழிக்க சதிசெய்ய நினைக்கின்றது. அதையும் நாம் திறமையாக எதிர் கொள்வோம். சீனாவை கண்டு நாம் பயப்படவேண்டாம். நாம் மிக மிக பயப்படவேண்டியது நம் நாட்டில் உள்ள தேச துரோகிகளை கண்டுதான்.. அவர்கள்தான் நமக்கு பெரிய எதிரி.” – என்றார்.

# இம்ரான்கானின் கட்சியினர் நடத்திய பேரணியில் குண்டுவெடிப்பு: பலர் பலி



பாகிஸ்தானில் இம்ரான் கட்சியின் ஆதரவாளர்கள் நடத்திய பேரணியில் குண்டு வெடித்ததில் பலர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர் என அந்நாட்டு தகவல்கள் தெரிவித்தன.

பாகிஸ்தான் நாட்டின் பலூசிஸ்தான் மாகாணத்தில் குவெட்டா நகரில், நேற்று இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில், அக்கட்சியை சேர்ந்த தொண்டர்கள் 3பேர்உள்பட4பேர்உயிரிழந்துள்ளனர். 7 பேர் படுகாயமடைந்தனர் என முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. அதனால், உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்க கூடும் என அஞ்சப்படுகிறது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்க 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்ட சில மணிநேரங்களில் இந்த பேரணி நடைபெற்றது.

குண்டுவெடிப்பு சம்பவம் பற்றிய காணொலி ஒன்றும் வெளிவந்துள்ளது. பலத்த சத்தம் கேட்டதும் கட்சியினர் அலறும் காட்சிகள் அதில் இடம் பெற்றுள்ளன.

பாகிஸ்தானில் பெப்ரவரி 8ஆ ம் திகதி பொது தேர்தல் நடைபெற உள்ள சூழலில் இந்த குண்டுவெடிப்பு நடந்துள்ளமை பரபரப்பை ஏற்புடுத்தியுள்ளது.

# கொரிய தீபகற்பத்தில் போர் பதற்றம்: மீண்டும் வடகொரியா ஏவுகணை சோதனை

கொரிய தீப கற்பத்தில் போர் பதற்றத்தை உருவாக்கும் முயற்சியில் வடகொரியா ஈடுபட்டு வருவது அதன் அண்மைக்கால செயற்பாட்டில் உறுதியாகிவருகிறது.

இதன்படி இந்த மாதத்தில் 3 ஆவது முறையாக நேற்று வட கொரியா ஏவுகணைகளை வீசி மீண்டும் சோதனை நடத்தியுள்ளது.

இது குறித்து தென் கொரிய முப்படை தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வட கொரியா தனது தெற்கு கடலோரப் பகுதிகளில் இருந்து ஒன்றுக்கு மேற்பட்ட ஏவுகணைகளை வீசி நேற்று செவ்வாய்க்கிழமை சோதித்துப் பார்த்தது.

கடல் பகுதியில் வீசப்பட்ட ஏவுகணைகளின் ரகங்கள் உள்ளிட்ட கூடுதல் விவரங்களை சேகரித்து வருகிறோம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1950 - 1953 ஆம் ஆண்டின் கொரிய போருக்குப் பிறகு அமெரிக்காவும், தென் கொரியாவும் இணைந்து அவ்வப்போது கூட்டு இராணுவப் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இது, தங்களது நாட்டின் மீது போர் தொடுப்பதற்கான ஒத்திகை என்று வட கொரியா கருதுகிறது. அத்தகைய பயிற்சிகள் நடந்தால் அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் வட கொரியா ஏவுகணைகளை வீசி சோதித்து வருகிறது.

இந்தச் சூழலில், அமெரிக்காவுடன் தென்கொரியாவும், ஜப்பானும் இணைந்து அண்மையில் நடத்திய கூட்டு இராணுவப் பயிற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து வட கொரியா இந்த ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.

# காசா போரை நிறுத்துவற்கான புதிய திட்டம் குறித்து ஆய்வு



காசாவில் போரை நிறுத்துவற்கான புதிய திட்டம் தொடர்பில் ஆராய்ந்து வருவதாக ஹமாஸ் அமைப்பின் அரசியல் தலைவரான இஸ்மைல் ஹனியே தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல், அமெரிக்கா, கட்டார் மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் வகுத்துள்ள திட்டம் தொடர்பில் விவாதிப்பதற்காக தங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, இஸ்ரேலிய பணயக்கைதிகள் பாலஸ்தீனிய கைதிகளுக்கு பதிலாக மாற்றப்படும் போது, ஆறு வார போர் நிறுத்தம் முன்மொழியப்பட்டுள்ளது.

இருப்பினும் ஹமாஸின் முன்னுரிமையான, நிரந்தர போர்நிறுத்தம் மற்றும் முழு இஸ்ரேலிய வெளியேற்றம் என்பன தொடர்பில் வலியுறுத்தப்படும் என அதன் அரசியல் தலைவரான இஸ்மைல் ஹனியே தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அவற்றை நிராகரித்துள்ளார். 'முழு வெற்றியை' அடையும் வரை போர் முடிவுக்கு வராது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி போர் தொடங்கிய நாளில் இருந்து இதுவரையில் காசாவில் 26 ஆயிரத்து 700 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# மல்லாகம் பெரியதம்பிரான் ஆலயத்தில் சங்காபிஷேகம் சிறப்பாக இடம்பெற்றது

வரலாற்று பிரசித்தி பெற்ற மல்லாகம் பெரியதம்பிரான் ஆலயத்தில் சங்காபிஷேகம் நேற்று வெகுசிறப்பாகவும் பக்தி பூர்வமாகவும் இடம்பெற்றது.

ஆலயத்தில் இடம்பெற்ற விஷேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து பெரிதம்பிரான் பெருமானுக்கு விசேட பால் அபிசேஷகம் இடம்பற்றது.

அதனை தொடர்ந்து ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து பிராதான கும்பங்கள் தவில் நாதஸ்வரம் முழங்க உள்வீதி வலம் வந்து பெரியதம்பிரான் பெருமானுக்கு சங்காபிஷேகம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பெருமளவிலான அடியவர்கள் கலந்துகொண்டு பெரிய தம்பிரானின் அருள் கடாசத்தினை பெற்றுக் கொண்டனர்.










# டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்தார் சாந்தனின் தாயார்

ராஜீவ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு விடுதலையாகிய சாந்தன் நாட்டிற்கு அழைத்து வருவது தொடர்பாக சம்மந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி ஒரு சில தினங்களுக்குள் பதிலை பெற்றுத் தருவேன் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

சாந்தன் சுகயீனம் காலணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில், அவரின் தாய் மற்றும் சகோதரர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று சந்தித்து, சாந்தன் நாட்டிற்கு வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு கேட்டுக் கொண்டனர். இதன்போதே, அமைச்சர் டக்ளஸ் தேவானநந்தாவினால் இந்த உறுதி மொழி வழங்கப்பட்டது.



# மன்னார் மாவட்ட சுதந்திர தின நிகழ்வின் முன் ஆயத்தம் தொடர்பில் கலந்துரையாடல்

(மன்னார் நிருபர்)

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின நிகழ்வை முன்னிட்டு மன்னார் மாவட்ட ரீதியில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பான முன் ஆயத்த கலந்துரையாடல் இன்று காலை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் மன்னார் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், திணைக்கள தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், முப்படை அதிகாரிகள், பதவி நிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது எதிர்வரும் 4 ஆம் திகதி இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்படவுள்ள நிலையில் மன்னார் மாவட்டச் செயலகம் உள்ளிட்ட அரச திணைக்களங்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளின் முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.

மேலும் மன்னார் மாவட்டச் செயலகத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய சுதந்திர தின நிகழ்வுகள் குறித்தும் அரசாங்க அதிபரினால் தெளிவு படுத்தப்பட்டது.

அன்றைய தினம் இடம்பெற உள்ள மர நடுகைகள், மாவட்டத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் அரச அதிபர் தலைமையில் விரிவாக ஆராயப்பட்டது.

எதிர்வரும் 4 ஆம் திகதி காலை சுதந்திர தினத்தையொட்டி படையினர் மற்றும் பாடசாலை மாணவர்களினால் முன்னெடுக்கப்படவுள்ள அணிவகுப்பு மரியாதை நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை ஒத்திகை நிகழ்வாக முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# நீர்த்தாரை பிரயோகத்திற்கு எதிராக அடிப்படை உரிமைகள் மனு தாக்கல்

ஐக்கிய மக்கள் சக்தியினால் நேற்று முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணியின் போது சட்ட விரோதமான முறையில் மேற்கொள்ளப்பட்ட நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோக நடவடிக்கைக்கு எதிராக அடிப்படை உரிமைகள் மனு தாக்கல் செய்யப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தி ஐக்கிய மக்கள் சக்தியினரால் கொழும்பில் நேற்று எதிர்ப்பு பேரணி முன்னெடுக்கப்பட்டது.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றிருந்தனர்.

முன்னதாக கொழும்பின் சில வீதிகளில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் வகையில் பேரணியை முன்னெடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களுக்கு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம், கோட்டை நீதவான் நீதிமன்றம் மற்றும் மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் என்பன தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், ஐக்கிய மக்கள் சக்தியினர் தங்களது எதிர்ப்பு பேரணியை நீதிமன்ற தடை உத்தரவுக்கு உட்படாத வேறு இடங்களிலிருந்து ஆரம்பித்திருந்தனர்.

இதன்படி, வெவ்வேறு இடங்களில் ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணிகள் கொழும்பு - விஹாரமஹாதேவி பூங்காவுக்கு அருகில் ஒன்றிணைந்து மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணியாக முன்னெடுக்கப்பட்டது.

இதனால், அந்தப் பகுதிகளில் கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தது.

இந்தநிலையில் பொலிஸாரின் தடைகளை மீறி ஆர்ப்பாட்ட பேரணி முன்னோக்கி செல்ல முற்பட்ட வேளையில் காவல்துறையினர் இரு வேறு சந்தர்ப்பங்களில் கண்ணீர் புகை மற்றும் நீர்தாரை பிரயோகம் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் உள்ளிட்ட ஐவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் அமைச்சர்கள் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் அடங்குகிறார் என வைத்திய சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, பொதுமக்களின் அடிப்படை உரிமையும், மனித உரிமையும் முழுமையாக மீறப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட ஆட்சியாளர்கள் முடியுமாயின் மக்களை சந்திப்பதற்கு முன்வர வேண்டும் என தாம் சவால் விடுவதாகவும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மக்களின் வாக்குகளின் ஊடாகவே தங்களது பதிலளிப்பு காணப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் தங்களது அரசாங்கத்தின் போது நாட்டை நெருக்கடி நிலைக்கு கொண்டு சென்றவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், சட்டவிரோதமான முறையில் மேற்கொள்ளப்பட்ட நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோக நடவடிக்கைக்கு அடிப்படை உரிமைகள் மனு தாக்கல் செய்யப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

# ஷசீந்திர ராஜபக்ஷவுக்கு மேலதிக இராஜாங்க அமைச்சு



இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த வகித்துவந்த நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சு பொறுப்பு இராஜாங்க அமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

முன்னதாக ஷசீந்திர ராஜபக்ஷ நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சராக பதவி வகித்து வந்தார்.

இந்த நிலையில், அந்த அமைச்சு பொறுப்புக்கு மேலதிகமாக அவருக்கு நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சுப் பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, நீர்ப்பாசன மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சராக ஷசீந்திர ராஜபக்ஷ, இன்று முற்பகல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.